செ.வெ.எண்:23 நாள்:18.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் 25% இட ஒதுக்கீட்டின் கீழ் குழந்தைகளுக்கான சேர்க்கை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக குழந்தைகளுக்கான **இலவச கட்டாய கல்வி** உரிமைச் சட்டத்தின் கீழ் 2017-18ஆம் கல்வி ஆண்டிற்கு **25%** இட ஒதுக்கீட்டின் கீழ் குழந்தைகளுக்கான சேர்க்கை நடைமுறை குறித்து 17 மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், 62 மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுடன் ஆலோனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் **(17.04.2017) அன்று** நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

தமிழக அரசு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009-ன்படி அனைத்து சிறுபான்மையற்ற தனியார், சுயநிதி பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை வகுப்புகளில் சேர்ந்து கல்வி பயில குறைந்த பட்சம் 25% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. 2017-18ஆம் கல்வி ஆண்டிற்கு 25% இட ஒதுக்கீட்டின் கீழ் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்கைக்கு தனியார், சுயநிதி பள்ளி தலைமையாசிரியர்கள் விண்ணப்பங்களை வரவேற்று பள்ளித் தகவல் பலகையில் வெளியிட வேண்டும். பள்ளிகளில் சேர்க்க இணையவழியாகவும் **(www.dge.tn.gov.in)** விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கப்பட்டவுடன் தகுதிவாய்ந்த விண்ணப்பத்தாரர் விவரம் / தகுதியில்லாத விண்ணப்பதாரர்கள் விவரம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்துடன் பள்ளி தகவல் பலகையில் அப்பள்ளி நிர்வாகம் வெளியிட அறிவுருத்தப்பட்டுள்ளது. தகுதியான சேர்க்கை விண்ணப்பங்கள் 25% இட ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களை விட கூடுதலாக இருந்தால் குழுக்கள் முறையில் தேர்வு செய்யப்பட வேண்டும் எனவும், தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர்கள் மற்றும் ஒவ்வொரு பிரிவிற்கும் ஐந்து இடங்கள் கொண்டு காத்திருப்பு பட்டியல் ஆகிய விவரங்கள் விண்ணப்ப எண்ணுடன் பள்ளித் தகவல் பலகையில் வெளியிடப்பட வேண்டும் எனவும், வெளியிடப்பட்ட பட்டியலை மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும் என தனியார் மற்றும் சுயநிதி பள்ளிகளுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது. மேலும், 25% இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை நடைமுறைகளை அனைத்து தனியார் மற்றும் சுயநிதி பள்ளிகள் பின்பற்றிட வேண்டும். எனவே, இந்த அறிய வாய்ப்பை நலிவடைந்த ஏழை எளியோர் தம்முடைய குழந்தைகளுக்கு கல்வி பயில ஒரு வாய்ப்பினை பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ந.மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், அனைத்து உதவித் தொடக்க கல்வி அலுவலர்கள், வட்டார வளமையம் மேற்பார்வையாளர்கள் மற்றும் பள்ளி முதல்வர்கள், தலைமையாசிரியர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.